# INTERNATIONAL INDIAN SCHOOL, RIYADH
## SUMMATIVE ASSESSMENT – 1
## V - STANDARD TAMIL WORKSHEET 2016-2017

## எங்கள் தமிழ்

பொருள்தருக:

1. கனி – பழம்
2. நனி – மிகவும்
3. தொண்டு – சேவை
4. தினம் – நாள்தோறும்
5. பேறு – வரம்
6. வெல்க – வெற்றி பெறுக

சேர்த்து எழுது:

1. தோள் + தட்டி = தோள்தட்டி
2. இன்பம் + தமிழ் = இன்பத்தமிழ்
3. வேறு + எங்கும் = வேறெங்கும்

பிரித்து எழுது:

1. மக்களுண்டு = மக்கள் + உண்டு
2. தமிழுண்டு = தமிழ் + உண்டு
3. கனியுண்டு = கனி + உண்டு

விடையளி:

1. இனிமையான மொழி எது?

இனிமையான மொழி தமிழ்

2. தமிழ் எப்படிப்பட்ட சொல்லை உடையது?

தமிழ் தனிமைச் சுவையுடைய சொல்லை உடையது

3. நனியுண்டு, நனியுண்டு காதல் – எதன் மீதில்?

தமிழ் மீதில்

பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து எடுத்தெழுதுங்கள்.

விலங்கின் உறுப்பு வால் ( வாள் / வால் )

வீரனிடம் இருப்பது வாள்

வேகமாய் வருவது வெள்ளம் ( வெல்லம் / வெள்ளம் )

விரும்பி உண்பது வெல்லம்

கடலின் ஓரம் கரை ( கரை / கறை )

சட்டையில் படுவது கறை

தமிழ் மாதத்தில் ஒன்று ஆனி ( ஆனி / ஆணி )

சுவரில் அடிப்பது ஆணி

# நேர்மை தந்த பரிசு

## பொருள்தருக:

1. பணிப்பெண் = பணி + பெண் வேலைக்காரி
2. அரண்மனை = மன்னர் வாழும் வீடு
3. நேர்மை = உண்மை

## சேர்த்து எழுது:

1. பணி + பெண் = பணிப்பெண்
2. கேட்டு + அறிந்தாள் = கேட்டறிந்தாள்
3. பூ + தொட்டி = பூந்தொட்டி

## பிரித்து எழுது:

1. விதையைப் பெற்றாள் = விதையை + பெற்றாள்
2. செடியில்லாத = செடி + இல்லாத
3. மண்தொட்டி = மண் + தொட்டி
4. வெறுந்தொட்டி = வெறுமை + தொட்டி

5. வினாக்கள் (Refer the N/B)

விடுபட்ட சொற்களைக் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு நிரப்புவோம்.

(தூண்டில், மீன்கொத்தி, காகம், தாமரை மலர்கள், மையப்பகுதி, மரங்கள்)

எங்கள் ஊரில் உள்ள நீர் நிரம்பிய குளத்தில் சிவப்பு, வெள்ளைத் தாமரை மலர்கள் அழகாகப் பூத்திருக்கின்றன. குளக்கரையின் நான்கு பக்கமும் மரங்கள் உள்ளன. மரத்தின் மீது மீன்கொத்தி, காகம் ஆகிய பறவைகள் அமர்ந்து இருக்கின்றன. குளக்கரையில் அமர்ந்து ஒருவர் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார். சிலர் குளத்தின் மையப்பகுதி வரை நீந்திச் செல்கின்றனர். தாமரைக் குளம்தான் எவ்வளவு அழகு!

## ஊர் செழித்தது

பொருள்தருக:

1. தூறல் = சிறு மழை
2. சோலை = பூங்கா
3. இருள் = இருட்டு

பிரித்து எழுது:

1. அந்தப்பக்கம் = அந்த + பக்கம்
2. பெருக்கெடுத்து = பெருக்கு + எடுத்து
3. கருமேகங்கள் = கருமை + மேகங்கள்

## சேர்த்து எழுது:

1. ஒலித்து + கொண்டே = ஒலித்துக்கொண்டே
2. கொண்டு + இருந்தது = கொண்டிருந்தது
3. ஆவணம் + படம் = ஆவணப்படம்

## பொருத்துக:

1. பறவைகள் – திரண்டன 2
2. மேகங்கள் – விளைந்தன 4
3. மழை – ஒலி எழுப்பின 1
4. பயிர்கள் – ஓடியது 5
5. வெள்ளம் – பெய்தது 3

கொடுத்துள்ள சொற்களைக் கொண்டு விவரித்துக் கூறுங்கள், எழுதுங்கள்.

1. குமுதா – வீடு – பிறந்தநாள் – தோட்டம் – தண்ணீர்.

குமுதா தன் வீட்டில் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடினாள்.

1. குமுதா 9 வயது சிறுமி.
2. தோட்டத்திற்கு தண்ணீர் விட்டாள்
3. அவள் வீடு அழகானது.
4. அவள் வீட்டில் பிறந்தநாள் கொண்டாடினாள்.

## பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.

1. சூரியன் மேற்குத் திசையில் மறைந்தது
2. கருமேகங்கள் திரண்டு வந்தன
3. சிறுவன், தேங்கியிருந்த மழைநீரில் குதித்தபடி சென்றான்
4. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

(சென்றான், அடைந்தனர், மறைந்தது, வந்தன)

## கோடிட்ட இடத்தை நிரப்பு

1. பூங்குழலி படித்தாள்.
   எழிலன் படித்தான்
2. மாணவன் விளையாடினான்.
   மாணவர்கள் விளையாடினார்கள்
3. மாடு மேய்ந்தது.
   மாடுகள் மேய்ந்தன
4. மரம் வளர்ந்தது.
   மரங்கள் வளர்ந்தன
5. பறவை பறந்தது.
   பறவைகள் பறந்தன
6. அண்ணன் பாடம் படித்தான்.
   அக்காள் பாடம் படித்தாள்
7. பூக்கள் பூத்தன.
   பூ பூத்தது
8. கிளிகள் பறந்தன.
   கிளி பறந்தது
9. நாய்கள் குரைத்தன.
   நாய் குரைத்தது
10. குழந்தை சிரித்தது.
    குழந்தைகள் சிரித்தன
11. முருகன் பாடினான்.
    கமலா பாடினாள்
12. குதிரைகள் ஓடின.
    குதிரை ஓடியது

# கௌதாரியும் முயலும்

அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. இருப்பிடம் = வாழிடம்
2. வஞ்சகம் = சூழ்ச்சி

ஆ) பிரித்து எழுதுக.

1. விளைந்திருந்தன = விளைந்து + இருந்தன
2. அறுவடைக்காலம் = அறுவடை + காலம்
3. நெடுநாள் = நெடுமை + நாள்
4. சண்டையில்லாமல் = சண்டை + இல்லாமல்
5. முடிவெடுத்தன = முடிவு + எடுத்தன.

இ) சேர்த்து எழுதுக.

1. அ + பூனை = அப்பூனை
2. நெல் + கதிர்கள் = நெற்கதிர்கள்
3. தேடி + சென்றன = தேடிச்சென்றன
4. கல்வி + பிடிக்க = கல்விப் படிக்க

ஈ) விடை எழுதுக.

1. கௌதாரி எங்கு வாழ்ந்து வந்தது?
2. கௌதாரி ஏன் கோபம் கொண்டது?
3. முயலும் கௌதாரியும் யாரைத் தேடிச் சென்றன?
4. தேடாமலேயே உணவு கிடைத்துவிட்டது என்று கூறியது யார்?
5. கௌதாரியும் முயலும், சண்டையில்லாமல் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தன. எவ்வாறு?

உ) உரிய சொல்லை எடுத்து எழுதுக.

1. புறாக்கள் இரை தேடிச் சென்றன. (இரை / இறை)
2. என் வீட்டு மாடி அறை யில் புத்தகங்கள் இருக்கின்றன. (அரை / அறை)
3. கடைக்காரர் சில்லறை இல்லையெனக் கூறினார். (சில்லரை / சில்லறை)
4. உலகம் பரந்து விரிந்தது. (புறந்து / பரந்து)

# திருக்குறள்

பொருள்தருக:

என்பு – எலும்பு
ஆவது அறிவர் – பின் வருவதை முன் கூட்டியே அறிபவர்.

எதிர்ச்சொல்:

அன்பிலார் X அன்புடையார்
அறிவுடையார் X அறிவிலார்
பிறர்க்கு X தமக்கு